**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8044375

1. District மாவட்டம்: Salem District PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 6/AC/2023 Date: நாள் 9.8.2023

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல்
Date to : நாள் வரை
1) 24.07.2023 at 10.00hrs at police station
2) 27.07.2023 at 17.00hrs at police station
3) 28.07.2023 at 10.00hrs at police station
4) 31.07.2023 after noon at police station
5) 03.08.2023 at 17.00hrs by phone
6) 04.08.2023 at 12.00hrs by phone
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 9.08.2023 at 06.45hrs Time நேரம்

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 9.08.2023 Time நேரம் : 08.00hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 4.0 km North west
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Mechery Police Station, Salem Dist
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. A. Prabhu (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Anavaradhan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் Security (g) Address : முகவரி D. No. 2-148, Aranganur, Mettur circle, Salem Dist.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. Shanmugam, Inspector of Police, Mechery Police Station, Salem Dist
2) Tr. Manoj Vijayan, Driver Pr. Mechery Police Station, Salem Dist.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. (if any)
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு வழக்கு எண் (இருந்தால்) —

12 FIR Contents (Attach separate sheet if required)
முதல் தகவல் அறிக்கையின் சாரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Seperate sheet attached herewith

13 Action taken: Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No. 2 registered the case and took up the investigation / directed ____ Rank ____ to take up the investigation / Refused investigation / transferred to PS ____ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : [illegible] புலன் [illegible] நிலை [illegible] பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / [illegible] காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் தகவல் அறிக்கை குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் கொடுப்பவருக்கு [illegible] கொள்ளப்பட்டு, அதன் நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A. Prakash
9.8.2023

R.D. Ravikumar 9.8.2023

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகை பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்
9.08.2023 at 9 hrs

Name: பெயர் R.D. RAVIKUMAR
Rank: நிலை Inspector of Police No. எண்
VHAI, Salem.

<u>சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 6/AC/2023 u/s 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.</u>

இன்று 09.08.2023 ஆம் தேதி காலை **06.45** மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்திலிருந்தபோது, திரு.A. பிரபு, த/பெ. அனவரதன், கதவு எண். **2–148,** அரங்கனூர், மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம் என்பவர் அலுவலகம் வந்து கொடுத்த, கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர் A. பிரபு, த/பெ. அனவரதன், கதவு எண். 2–148, அரங்கனூர், மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம் பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு பிரிவு, சேலம். ஐயா, நான் மேட்டூர் வட்டம், அரங்கனூர் கிராமத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் பி.எஸ்சி வரை படித்துள்ளேன். செக்யூரிட்டியாக வேலை செய்து வருகிறேன். எனது பெயரில் கடந்த 1996 ஆம் ஆண்டில் மேச்சேரி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 414/96 படி அரங்கனூர் கிராம சர்வே எண். 293/2ஏ ல் 1 ஏக்கர் 41 செண்ட் விவசாய நிலமும், சர்வே எண். 296/2 ல் 2 ஏக்கர் 46 செண்ட் விவசாய நிலமும் கிரயம் பெற்றிருந்தேன். நான் எனது விவசாய நிலத்தின் அசல் பத்திரத்தை அடமானம் வைத்து கடன் பெற முடிவு செய்தேன். அதனைத் தொடர்ந்து கடந்த 17.07.2022 ஆம் தேதியன்று எனது அசல் பத்திரத்தை மேச்சேரியில் உள்ள ஒரு ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுத்து விட்டு ஜெராக்ஸ் மற்றும் அசல் பத்திரத்தை ஒரு கவரில் வைத்து அதை எனது மொபட்டின் முன்பகுதியில் வைத்துக் கொண்டு எனது வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்தேன். எனது வீட்டிற்கு வரும் வழியில் பத்திரகாளியம்மன் கோவிலில் எனது இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு மாலை வாங்கச் சென்றுவிட்டு மீண்டும் திரும்பி வந்த போது எனது இருசக்கர வாகனத்தின் முன்பகுதியில் வைத்திருந்த கவர் மற்றும் அதில் வைத்திருந்த அசல் பத்திரம் மற்றும் நகல் ஆகியவைகள் காணாமல் போயிருந்தது. நான் பல்வேறு இடங்களில் எனது காணாமல் போன அசல் பத்திரத்தை தேடிப்பார்த்தேன். அது கிடைக்கவில்லை. அதன் பிறகு 20.07.2022 அன்று காணாமல் போன எனது கிரைய பத்திரத்தை கண்டுபிடித்துத் தர வேண்டி திரு. சண்முகம், காவல் ஆய்வாளர், மேச்சேரி அவர்களிடம் ஒரு புகார் மனு கொடுத்தேன். புகார் மனுவை வாங்கி படித்துப் பார்த்த காவல் ஆய்வாளர் அவர்கள் கிரய பத்திர நகல், தினசரி பேப்பரில் விளம்பரம் செய்து அதன் நகல், ஆதார் கார்டு, ரேசன் கார்டு நகல், வில்லங்க சான்று நகல், கிராம நிர்வாக அலுவலர் சான்று ஆகியவைகள் இணைத்து கொடுக்குமாறு அந்த புகார் மனுவை என்னிடமே திருப்பி கொடுத்து விட்டார். அதன் பிறகு

9.8.23

நான் அந்த ஆவணங்களை ரெடி செய்து அவற்றை அதே புகார் மனுவுடன் இணைத்து மீண்டும் காவல் ஆய்வாளர் திரு. சண்முகம் அவர்களிடம் கொடுத்தேன். அவற்றை வாங்கி பார்த்த காவல் ஆய்வாளர் அவர்கள் அந்த புகார் மனுவை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் சென்று கொடுக்குமாறு தெரிவித்தார். அதன் பிறகு 1.8.2022 ஆம் தேதி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் சென்று காவல் கண்காணிப்பாளரை நேரில் சந்தித்து மனு கொடுத்தேன். இரண்டு மூன்று நாட்கள் சென்றபிறகு மேச்சேரி காவல் நிலையம் சென்று பார்க்குமாறு தெரிவித்ததன் பேரில் நான் மூன்று நாட்களுக்குப் பிறகு மேச்சேரி காவல் நிலையம் சென்று காவல் ஆய்வாளர் திரு. சண்முகம் அவர்களை சந்தித்து காவல் கண்காணிப்பாளர் அவர்களை பார்த்து மனு கொடுத்த விவரத்தை தெரிவித்தேன். அதற்கு அவர் இரண்டு நாட்கள் கழித்து வந்து பார்க்குமாறு சொன்னார். நான் மீண்டும் காவல் ஆய்வாளர் திரு. சண்முகம் அவர்களை மேச்சேரி காவல் நிலையத்தில் சந்தித்து எனது மனு பற்றி கேட்டபோது அவர் நில அபகரிப்பு பிரிவிற்குச் சென்று ஒரு மனு கொடுக்குமாறு தெரிவித்ததன்பேரில் நான் 19.08.2022 அன்று சேலம் மவாட்ட கண்காணிப்பாளர் அலுவலக வளாகத்தில் இயங்கி வந்த நில அபகரிப்பு பிரிவிற்குச் சென்று ஒரு மனு கொடுத்தேன். அங்கிருந்த அதிகாரி அந்த மனுவை வாங்கி படித்துப் பார்த்துவிட்டு அதில் கையொப்பம் செய்து அதை என்னிடமே கொடுத்து மேச்சேரி காவல் ஆய்வாளரைச் சென்று பார்க்குமாறு கூறினார். அதன் பின்னர் நானும் அந்த மனுவுடன் மேச்சேரி சென்று காவல் ஆய்வாளர் திரு. சண்முகம் அவர்களை சந்தித்து மனுவை கொடுத்தேன். அந்த மனுவைப் பெற்றுக் கொண்டு காவல் ஆய்வாளர் ஒரு வாரம் கழித்து வந்து பார்க்குமாறு கூறினார். அதன் பின்னர் நான் ஒரு வாரம் கழித்து மேச்சேரி காவல் ஆய்வாளர் திரு. சண்முகம் அவர்களை சென்று பார்த்தேன். அப்போது காவல் ஆய்வாளர் அவர்கள் நீதின்றத்தில் மனு தாக்கல் செய்து உத்திரவு பெற்று வருமாறு சொல்லி எனது மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் வைத்திருந்தார். எனவே நான் சென்னை உயர் நீதிமன்றத்தில் Crl. Op. No.13591 /23 படி மனு தாக்கல் செய்தேன். எனது மனு தொடர்பாக மேச்சேரி காவல் ஆய்வாளரை நடவடிக்கை எடுக்க 20.06.2023 அன்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. உத்திரவு நகல் எனக்கு கிடைத்தவுடன் நான் 22.07.2023 அன்று காலை மேச்சேரி காவல் நிலையம் சென்று காவல் ஆய்வாளர் திரு. சண்முகம் அவர்களைச் சந்தித்து உயர் நீதிமன்ற உத்திரவு நகலை கொடுத்தேன். அதை வாங்கிக் கொண்டு காவல் ஆய்வாளர் திரு. சண்முகம் அவர்கள் அடுத்த நாள் வருமாறு கூறினார். நானும் அடுத்த நாள் 23.07.2023 ஆம் தேதி காலை மேச்சேரி காவல் நிலையம்

9.8.23

சென்று காவல் ஆய்வாளர் திரு. சண்முகம் அவர்களை சந்தித்தபோது அவர் என்னிடம் 23.07.2023 தேதிய மனு ரசீது 338/2023 கொடுத்து அடுத்த நாள் வந்து பார்க்குமாறு கூறினார். நானும் 24.07.2023 ஆம் தேதியன்று காலை சுமார் 10 மணியளவில் சென்று காவல் ஆய்வாளர் திரு. சண்முகம் அவர்களை சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம் எதற்காக பத்திரம் தேவைப்படுகிறது என்று கேட்டார். நான் எனது நிலத்தை அடமானம் வைத்து கடன் பெறலாம் என்று இருந்தேன். ஆனால் எனது மகளின் திருமணம் வர இருப்பதால் எனது நிலத்தை விற்று திருமணத்தை நடத்த முடிவு செய்திருந்த விவரத்தை கூறினேன். அதற்கு அவர் நிலத்தை விற்பதற்காக நீதிமன்றம் எல்லாம் சென்று செலவு செய்துள்ளாய் என்றும் எனவே பத்திரம் காணாமல் போனது தொடர்பாக சான்று கொடுக்க வேண்டும் என்றால் தனக்கு தனியாக ரூ. 25,000/– கொடுக்குமாறு கேட்டார். நான் என்னிடம் அவ்வளவு தொகை இல்லை என்று கூறினேன். பணம் இல்லை என்றால் எதுவும் வேலை ஆகாது என்றும், பணத்துடன் வருமாறு கண்டிப்பாக என்னிடம் கூறினார். நான் எதுவும் கூறாமல் அங்கிருந்து வந்து விட்டேன். அதன் பிறகு நான் 27.07.2023 ஆம் தேதி மாலை சுமார் 5 மணியளவில் மேச்சேரி காவல் நிலையம் சென்று காவல் ஆய்வாளர் திரு. சண்முகம் அவர்களைச் சந்தித்து எனது பத்திரம் தொடர்பாக சான்று பற்றி கேட்டேன். அதற்கு அவர் ஏற்கனவே நான் கொடுத்திருந்த எனது மனு கோப்பை எடுத்து அதில் இணைக்கப்பட்டிருந்த எனது பத்திர நகலை படித்துப் பார்த்து விட்டு அதன் பின்னர் என்னிடம் எனது உறவினர்களின் பெயர் விவரங்களை கேட்டார். நானும் கூறினேன். அவர் ஒரு வெள்ளைத்தாளில் என்னிடம் கேட்டுத் தெரிந்த 21 பெயர்களை எழுதி அதை ஒரு ஜெராக்ஸ் எடுத்து என்னிடம் கொடுத்து அந்த லிஸ்டில் உள்ள அனைவரின் ஆதார் கார்டு நகல், செல் நெம்பர் ஆகியவைகளை வாங்கிவந்து கொடுக்குமாறு கூறினார். அதற்கு நான் எனது மனைவி, மகள்கள், அம்மா ஆகியோரின் ஆதார் கார்டு நகல் மற்றும் செல் நெம்பர் கொடுத்துவிடுவதாகவும் மற்றவர்கள் அனைவரும் வெளியூரில் இருப்பதால் அதற்கு அதிக நாட்கள் ஆகும் என்று கூறினேன். அதற்கு அவர் மற்ற நபர்களின் ஆதார் கார்டு நகல் மற்றும் செல் எண்கள் ஆகியவற்றுடன் தான் ஏற்கனவே கேட்டிருந்த ரூ.25,000/– த்தை கண்டிப்பாக கொடுக்க வேண்டும் என்று கூறினார். அதற்கு நான் சரி, பார்க்கலாம் சார் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்து விட்டேன். அடுத்தநாள் 28.07.2023 ஆம் தேதி காலை சுமார் 10 மணியளவில் நான் மேச்சேரி காவல் நிலையம் சென்று காவல் அய்வாளர் திரு. சண்முகம் அவர்களை சந்தித்து ஆறு நபர்களின் ஆதார் கார்டு நகல் மற்றும் செல் போன் எண்களை கொடுத்தேன். அவற்றை அவர் வாங்கி வைத்துக் கொண்டார். அதன்

பின்னர் மனோஜ் என்று அழைத்தார். அப்போது அங்கு வந்த ஒரு காவலரின் பெயர் பலகையில் மனோஜ் விஜயன் என்ற பெயர் இருந்தது. காவல் ஆய்வாளர் திரு. சண்முகம் அவர்கள் என்னிடம் அவர் தனது வாகன ஓட்டுனர் என்றும், அவரிடம் என்னை அறிமுகம் செய்து பத்திரம் மேட்டராக இவரிடம் நான் ஏற்கனவே கேட்டிருந்த ரூ. 25,000/– த்தை கொடுப்பார் என்றும், அதை வாங்கி வைக்குமாறும் கூறினார். அதற்கு அவரும் சரி சார் என்று கூறினார். பின்னர் திரு. மனோஜ் விஜயன் என்னை முதல் மாடிக்கு அழைத்துச் சென்று காணாமல் போன எனது பத்திரத்தை நான் அடமானம் வைத்திருந்தாலோ அல்லது அதை வைத்து கடன் வாங்கியிருந்தாலோ அதற்கு நானே முழு பொறுப்பாவேன் என்று தட்டச்சு செய்த ஒரு பேப்பரில் என்னிடம் கையொப்பம் பெற்றார். அதன் பின்னர் நான் முதல் மாடியில் இருந்து கீழே வந்து காவல் ஆய்வாளர் திரு. சண்முகம் அவர்களிடம் இது பற்றி தெரிவித்து விட்டு வெளியில் வந்தபோது அங்கு நின்று கொண்டிருந்த ஓட்டுனர் திரு. மனோஜ் விஜயன் என்னிடம் வந்து அய்யா சொன்னமாதிரி ரூ.25,000/– கொடு என்று கேட்டார். அதற்கு நான் தற்பொழுது பணம் இல்லை என்றும் பணத்தை ஏற்பாடு செய்து தான் கொடுக்கவேண்டும் என்று கூறினேன். அதற்கு அவர் பணத்தை ரெடி செய்து விட்டு போன் செய்யுமாறு கூறி என்னிடம் அவரின் செல் எண். 9080898521 ஐ கொடுத்தார். எனது செல் எண். 9865133381 ஐ வாங்கிக் கொண்டார். அதன் பின்னர் 31.07.2023 ஆம் தேதி மதியம் திரு. மனோஜ் விஜயன் அவர்களும், 03.08.2023 ஆம் தேதி மாலை சுமார் 5 மணியளவில் மேச்சேரி காவல் ஆய்வாளர் திரு. சண்முகம் அவர்களும் செல்போனில் தொடர்பு கொண்டு பணம் ரெடியாகிவிட்டதா என்று கேட்டனர். மேலும் 04.08.2023 ஆம் தேதி பகல் 12 மணியளவில் 9976109078 என்ற செல் போன் எண்ணிலிருந்து எனது செல் எண்ணிற்கு தொடர்பு கொண்டு நான் கொடுத்திருந்த லிஸ்டில் உள்ள நபர்களின் ஆதார் கார்டு நகல் கிடைக்கவில்லை என்றால் அவர்களின் முகவரி மற்றும் செல் எண்கள் ஆகியவற்றையாவது சீக்கிரம் கொண்டு வாருங்கள் என்றும், அதேபோல் தான் ஏற்கனவே கேட்டிருந்த பணம் ரூ.25,000/– த்தையும் கொண்டு வரும்படி கூறினார். அதற்கு நான் அவற்றை ரெடி செய்து விட்டு வருவதாக கூறினேன். தற்பொழுது காவல் ஆய்வாளர் திரு. சண்முகம் அவர்கள் கேட்டிருந்த முகவரிகள், செல்போன் எண்கள் மற்றும் பணம் ரூ.25,000/– ரெடியாக உள்ளது. நான் அவற்றுடன் திரு. சண்முகம், காவல் ஆய்வாளர் மற்றும் திரு. மனோஜ், காவல் ஆய்வாளரின் ஜீப் ஓட்டுனர் ஆகியோரை இன்று சந்திக்க தயாராக உள்ளேன். மேச்சேரி காவல் ஆய்வாளர் திரு. சண்முகம் அவர்களுக்கு அவரது ஜீப் ஓட்டுனர் திரு. மனோஜ் மூலம் லஞ்சமாக பணம் கொடுத்து என் வேலையை முடிக்க

7.8.23

எனக்கு விருப்பம் இல்லை. ஆகவே அவர்கள் மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் A.பிரபு, 9.8.2023.

Sir, Received the above computer typed complaint on 09.08.2023 at 06.45 hrs, the genuineness of the informant was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused were also verified through sources and found to be not good. Hence, I registered a case in Salem Vigilance and Anti Corruption Cr. No. 6/AC/2023 u/s 7 (a) of the Prevention of Corruption Act 1988 as Amended in 2018 on 9.8.2023 at 08.00 hrs and took up for investigation. Sd xxxx (R.D.RAVIKUMAR) 09.08.2023. Inspector of Police, V & AC, Salem.

Original FIR along with original computer typed complaint of A.Prabu S/o.Anavarathan is submitted to the Hon'ble Special Judge for Trail of cases under Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

9.8.23

(R.D.RAVIKUMAR)
INSPECTOR OF POLICE,
V&AC, SALEM.